**IA.No.4/2025 OS.77/2025 in 31.07.2025**

**உத்தரவு:–**

மனுதாரர்/வாதி தரப்பு கேட்கப்பட்டது. வழக்குரை ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் அசல் வழக்கு 77/2025 வழக்கினை நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவினை தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். வழக்குரை சங்கதிகளிலிருந்து மனு ஏ அட்டவணை சொத்தினை கிருஷ்ணசாமி கவுண்டர் என்பவரிடமிருந்து, ரங்கவலையைன் என்பவர் 06.09.1965 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்ற சொத்து என்பது தெரியவருகிறது. மேற்படி ரங்கவலையன் இறந்தபின்னர் மனுதாரரின் தந்தை பழனிவலையன் என்கிற ராஜமணியும், அவரது சகோதரர் அய்யாவுவையும் வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டதாகவும், மேற்படி வாதியும் தந்தையும் அவரது சகோதரரும், 14.08.2020 தேதியில் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து ஆவணங்களிலும் தாவா பி அட்டவணை சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள வண்டித்தடம் பயன்படுத்தும் உரிமை பற்றி தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஏ அட்டவணை சொத்திற்கு செல்வதற்கு தாவா பி அட்டவணை சொத்து மட்டுமே ஒரே தடம் என்றும் மாற்றுப்பாதை இல்லை என்றும் மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் 1 மற்றும் 2 மனுதாரர்கள் தாவா வண்டித்தடத்தை பயன்படுத்துவதற்கு மனுதாரருக்கு இடையூறு செய்வதாகவும், தடத்தை பயன்படுத்துவதை தடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ள மாதிரி வரைபடத்திலிருந்து மனுதாரரின் ஏ அட்டவணை சொத்திற்கு செல்வதற்கு பி அட்டவணை சொத்தான வண்டிப்பாதை மட்டுமே ஒரே வழிப்பாதை என்பது தெரிகின்றது. மனுதாரர் தரப்பில் தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காவிடில் மனுதாரருக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்குரை மாதிரி வரைபடத்திலிருந்து மனுதாரருக்கு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காவிடில் பெருத்த

நஷ்டம் ஏற்படும் என்பதற்கு மனுதாரர் தனக்கு சாதகமான முதல் தோற்ற வழக்கையும், சமநோக்கு நிலையையும் காட்டியுள்ளார். மனுதாருக்கு தற்போதைய சூழ்நிலையில் உறுத்துக்கட்டளை பாரிகாரம் வழங்குவது அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே தற்காலமாக மனுதாரர்/வாதி தாவா பி அட்டவணை சொத்தை பயன்படுத்துவதை 1 மற்றும் 2 பிரதிவாதிகள், அவரது வகை ஆட்கள் தடையோ அல்லது இடையூரோ செய்யக்கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. மனுதாரர்/வாதி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை XXXIX விதி 3(அ) மற்றும் (ஆ) கடைபிடிக்கவும் எதிர்மனுதாரர்கள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பவும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 29.08.2025.

V KALIDASAN
Digitally signed by V KALIDASAN
Date: 2025.07.31 18:17:44 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பல்லடம்.**